*1981*இல் சுற்றுலாத்துறையானது *52,800* கொண்ட மொத்தத் தொழில் வாய்ப்புக்களை வழங்கியதனுல் தொழில் வாய்ப்பினை வழங்கவேண்டும் என்ற அரசின் முயற்சிகளுக்குச் சாதகமான முறையில் உதவியுள்ளது. இது சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்ட தொகையைவிட *10* சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. சுற்றுலாத் துறையில் உருவாக்கப்பட்ட மொத்த தொழில் வாய்ப்புக்களில் நேரடியான தொழில் வாய்ப்பு *22,000* ஆகவிருக்கையில் மறைமுகமான தொழில் வாய்ப்பு *30,800* ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டுடன் ஒப்புநோக்குகையில் *1981* இல் நேரடியான தொழிலுக்கான வாய்ப்புகள் கூடிய வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ளனபோல் தோன்றுகின்றது.


## சென்மதி நிலுவை

*1981* இன் சென்மதி நிலுவை நிலைமைகள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் காட்டின. இம்முன்னேற்றத்திற்கு பொருத்தமான கேள்வி முகாமை, நெகிழத்தக்க செலாவணிவீத கொள்கைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டமையும் ஓரளவு காரணமாகும். செலாவணிவீதங்களின் அசைவுகள், அரசதுறையின் செலவின் விரிவில் கட்டுப்பாடு, கட்டுப்பாடான நாணயக்கொள்கைகள் ஆகிய அனைத்தும் இவ்வாண்டுப் பகுதியில் இறக்குமதிப் பாய்ச்சலில் ஏற்பட்ட அதிகரிப்புச் வீதத்தைக் குறைப்பதற்கு உதவின. இது, ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் சேர்ந்து முகாமைப் படுத்தத்தக்க மட்டங்களுள் வர்த்தகக்குறை அடங்குவதற்கு உதவின. குறுகியவர்த்தகக்குறை நிலவிய வேளையில் நடைமுறைக்கணக்கு மாற்றல்கள் தொடர்பாக பெருமளவு உள்வருகை ஏற்பட்டமை *1980* ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறைக் கணக்கு குறையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. மறுபுறத்தில் இவ்வாண்டுக்காலத்தில் வெளிநாட்டு கடன்கள் நேரடி முதலீடு, குறுங்காலக் கடன்பாடுகள் வடிவிலான பெருமளவு மூலதன உள்பாய்ச்சல்கள் இருந்ததன் விளைவாக, முன்னைய ஆண்டில் நிலவிய கணிசமான பற்றுக்குறைக்கு மாறாக *1981* இல் சென்மதிப் பற்றுக்குறையை மிகக் குறைந்த அளவில் அமைய உதவியது. ஆகவே முழுமையான சென்மதிக்குறைக்கு நிதியிடுவதற்கான தேறிய வெளிநாட்டு ஒதுக்குகளின் பயன்பாடு *1981* இல் மிகவும் குறைந்து காணப்பட்டது.

*1981* இல் முழுமையான சென்மதி நிலுவையின் தோற்றம் ஓரளவிற்குத் திருப்திகரமாக இருந்தபோதும் அதில் சில பாதகமான போக்குகள் காணப்பட்டன. *1977* நவெம்பரிலிருந்தும் செயற்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் குறுங்காலத்தில் தொடர்ந்தும் நடைமுறைக் கணக்குக் குறையைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. விரைவுபடுத்தப்பட்ட முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களுடன் சேர்ந்து தாராளமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கைகள் தொடக்க ஆண்டுகளில் உயர்ந்த மட்டங்களில் இறக்குமதிப் பாய்ச்சல்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. மறுபுறத்தில் ஏற்றுமதித்துறை பெருமளவில் பன்முகப்படுத்தப்பட்டு வளர்ச்சியைக் காட்டுமென எதிர்பார்க்கப்பட்டது. தொடக்க ஆண்டுகளில் தோன்றிய சென்மதி நிலுவைப் பற்றுக்குறைகள், தனியார் மூலதனம், அலுவல்சார் மூலதனம், பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான வசதிகள் போன்ற மூலங்களிலிருந்து நிதியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

## சென்மதி நிலுவை

ஆண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி

1981 இல் வர்த்தக நடைமுறைக் கணக்கு, பற்ருக்குறைகள் இரண்டும் முன்னைய ஆண்டின் பற்ருக்குறையிலும் பார்க்க ஓரளவிற்குக் குறைவாக இருந்த போதும் உயர்வாகக் காணப்பட்டன. இவ்வாண்டுக் காலத்தில் இடைநிலை முதலீட்டுப் பொருட்களின் உயர்மட்ட இறக்குமதி பெருமளவு வர்த்தகப் பற்ருக்குறைக்கு முக்கிய காரணியாக இருந்தது. ஏறத்தாழ இறக்குமதிச் செலவில் நான்கில் மூன்றுபங்கு, அரசதுறையின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு மிக முக்கியமாக இருந்த இடைநிலை முதலீட்டுப்பொருட்களுக்கான இறக்குமதிக்காகப் பயன்படுத்தப்பட்டது. இப்பொருட்களின் இறக்குமதிகளைக் குறைத்திருப்பின் நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் பாதகமான சிக்கல்கள் ஏற்பட்டிருக்கும் எனலாம். எவ்வாறிருப்பினும் இத்தகைய இறக்குமதிகளின் பெரும்பகுதி செயற்றிட்டக் கடன்பாய்ச்சலினுல் நிதியிடப்பட்டது. 1979 / 80 காலப்பகுதியில் பெற்ரேலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பினுல் எண்ணெய் விலைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டதனைத் தொடர்ந்து மசகெண்ணெய்க்கான இறக்குமதிக் கொடுப்பனவுகள் கணிசமாக அதிகரித்தமை 1981 இல் வர்த்தகப் பற்ருக்குறைக்கு மற்றுமொரு காரணியாக விளங்கியது. பெற்ரேலிய இறக்குமதிகள் (மொத்தம்) 1981 இல் நாட்டின் ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ அரைப்பங்கை ஈர்த்துக் கொண்டது. நடைமுறைக்கணக்கில் காணப்பட்ட அதிகரித்த குறையை நிதியிடுவதற்கு வெளிநாடுகளிலிருந்து நிதி மூலவளங்களைத் திரட்டுவது இன்றியமையாததாகும். வெளிநாட்டுதவிக் கடன்கள், நன்கொடைகள், பன்ஞட்டு நாணய நிதியத்திலிருந்தான எடுப்பனவுகள் போன்ற வழமையான மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்க மூலவளங்களின் அளவு வரையறுக்கப்பட்டிருப்பதால் குறைக்கு நிதியிடுவது ஏனைய மூலங்களை நாடுவது இன்றியமையாததாகும். இதன் விளைவாக வர்த்தக ரீதியான கடன்பாடுகள் கணிசமாக அதிகரித்துக்காணப்பட்டமையினுல் கொடுப்பனவுக் குறையை நிதிப்படுத்தும் பண்புகள் இவ்வாண்டுக்காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றமுற்றுக் காணப்பட்டன. இது 1981 இன் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட மிகப் பாதகமான விளைவாக இருந்தது.

## சென்மதிநிலுவைச் செயலாற்றம்

நடைமுறைக் கணக்கு மிகைகள் 1980 இல் ரூ. 109,120 இலட்சத்திலிருந்து (சிஎஉ 5070 இலட்சம்) 1981 இல் ரூ. 90,900 இலட்சங்களுக்கு (சிஎஉ 4040 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறை கணக்குக் குறை 1980 இல் 16 சதவீதத்திலிருந்து 1981 இல் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நடைமுறைக் கணக்குப் பற்ருக்குறையில் ஏற்பட்ட முன்னேற்றம் இறக்குமதிகள் குறைவடைந்தமை, தனியார் அலுவல்சார் மாற்றல்களின் அதிகரித்த உள்பாய்ச்சல்கள் ஆகியவற்றின் விளைவாகும். நாணயமல்லா மூலதனத்தின் தேறிய உள்பாய்ச்சல் முன்னைய ஆண்டின் மட்டமான ரூ. 65,850 இலட்சங்களுடன் (சிஎஉ 3060 இலட்சம்) ஒப்பிடுகையில் 1981 இல் ரூ. 76,630 இலட்சங்களாக (சிஎஉ 3400 இலட்சம்) விளங்கியது. அதிகரித்த மூலதன உள்பாய்ச்சல் காரணமாக முழுமையான பற்ருக்குறை 1980 ஆம் ஆண்டின் ரூ. 29 670 இலட்சம் (சிஎஉ 1660 இலட்சம்) கொண்ட பற்ருக்குறையுடன் ஒப்பிடுகையில் 1981 இல் ரூ. 4,060 இலட்சங்களில் (சிஎஉ 260 இலட்சம்) மட்டுப்படுத்தப்பட்டது. தேறிய பன்ஞட்டு ஒதுக்குகள் முழுமையான பற்ருக்குறை அளவிற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும் இவ்வாண்டுக்காலத்தில் மொத்த வெளிநாடடுச்சொத்துக்களின்மட்டம்அதிகரிப்பைக்காட்டியமை மத்தியவங்கியின் வெளிநாட்டுத்திரவ நிலைமைகளில் பிரதிபலித்தது. 1981 இன் முடிவில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 1982 இற்கான மதிப்பிடப்பட்ட இரண்டு மாதங்களின் இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது.

அட்டவணை 1.29

## சென்மதி நிலுவை - பகுப்பாய்வு வெளிப்படுத்துகை 1977 - 1981

| விடயம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சி. எ. உ. பத்து இலட்சங்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 | 1980 (அ) | 1981(ஆ) | 1977 | 1978 | 1979 | 1980 (அ) | 1981(ஆ) |
| 1. வணிகப் பொருட்கள் ... | + 350 | — 2,393 | — 7,288 | —16,312 | —16,192 | + 29 | — 144 | — 362 | — 758 | — 716 |
| ஏற்றுமதிகள் (க.எ.பெ) .. | 6,640 | 13,207 | 15,282 | 17,603 | 20'440 | 651 | 675 | 759 | 818 | 900 |
| இறக்குமதிகள் (கொ.க.க.) .. | — 6,290 | —15,600 | 22,570 | —33,915 | —36,632 | — 622 | — 819 | — 1121 | —1,576 | —1,616 |
| 2. பணிகள் ... | + 304 | + 119 | + 739 | + 859 | + 136 | + 29 | + 6 | + 37 | + 40 | + 6 |
| பெறுகைகள் ... | 923 | 1,942 | 2,992 | 4.605 | 5,815 | 89 | 99 | 149 | 214 | 256 |
| கொடுப்பனவுகள் ... | — 619 | — 1,823 | — 2,253 | — 3,746 | — 5,679 | — 60 | — 93 | —1,112 | — 174 | — 250 |
| 3. பொருட்களும் பணிகளும் (1+2) ... | + 654 | — 2,274 | — 6,549 | —15,453 | —16,056 | + 58 | — 138 | — 325 | — 718 | — 710 |
| 4. மாற்றல்கள் (தேறிய) ... | + 612 | + 1,242 | + 2,993 | + 4,541 | + 6,966 | + 59 | + 63 | + 148 | + 211 | + 306 |
| தனியார் (தேறிய) ... | 122 | 342 | 754 | 2,260 | 3,848 | 12 | 17 | 37 | 105 | 170 |
| அலுவல் சார்ந்த (தேறிய) .. | 490 | 900 | 2,239 | 2,281 | 3,118 | 47 | 46 | 111 | 106 | 136 |
| 5. நடைமுறைக் கணக்கு நிலுவை(3+4)... | +1,266 | — 1,032 | — 3,556 | —10,912 | — 9,090 | + 117 | — 75 | — 177 | — 50 | — 404 |
| 6. நாணயமல்லா மூலதனம் | + 326 | + 2,600 | + 3,306 | + 6,585 | + 7,663 | + 32 | + 133 | + 164 | + 306 | + 340 |
| தனியார் துறை .. | — 127 | 145 | 874 | 3,895 | 2,543 | — 12 | 8 | 43 | 181 | 116 |
| அரச துறை ... | 453 | 2,455 | 2,432 | 2,690 | 5,120 | 44 | 125 | 121 | 125 | 224 |
| நீண்டகாலம் (தேறிய) ... | 602 | 2,609 | 2,432 | 2,690 | 5,120 | 58 | 133 | 121 | 125 | 224 |
| பெறுகைகள் | (1,319) | (3,680) | (3,351) | (4,326) | (6,087) | (127) | (188) | (167) | (201) | (268) |
| கடன் தீர்ப்பனவுகள் ... | (—717) | (— 1,071) | (— 919) | (—1,636) | (— 967) | (—69) | (—55) | (—46) | (—76) | (—44) |
| குறுகிய காலம் (தேறிய) ... | — 149 | — 154 | — | — | — | — 14 | — 8 | — | — | — |
| 7. பெறுமதி சீராக்கங்கள் ... | + 1,680 | + 344 | — 18 | + 607 | — 39 | — | — | — | — | — |
| 8. பிழைகளும் தவிர்ப்புக்களும் ... | + 41 | — 50 | + 820 | + 495 | + 808 | + 4 | + 7 | + 36 | + 23 | + 26 |
| 9. சி. எ. உ. ஒதுக்கீடுகள் ... | — | — | 241 | 258 | 252 | — | — | 12 | 12 | 12 |
| 10. முழுமையான நிலுவை ... | +3,313 | + 1,861 | + 793 | — 2,967 | — 406 | + 153 | + 65 | + 35 | — 166 | — 26 |
| 11. நாணய அசைவுகள் (—மிகை) .. | —3,313 | — 1,861 | — 793 | + 2,967 | + 406 | — 153 | — 65 | — 35 | + 166 | + 26 |
| மாற்றல் வீதம், இ. ரூ. /சி. எ. உ. (ஆண்டுச் சராசரி) | | | | | | 10.42 | 19.58 | 20.13 | 21.52 | 22.67 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: நடைமுறைக் கணக்கில் நாணயமல்லா துறையின் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் நிறைவேற்றப்பட்ட ஆண்டுச் சராசரி வீதங்களில் மாற்றப்படுகின்றன நாணயத் துறை காலமுடிவிலுள்ள வீதங்களில் மாற்றப்படுகிறது.

மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (சிஎஉ நியதிகளில்) ரூ. 176,030 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 8180 இலட்சம்) 1981 இல் ரூ. 204,400 இலட்சங்களுக்கு (சிஎஉ 9000 இலட்சம்) 10 சதவீதத்தால் அதிகரித்தது. ஏற்றுமதி வருவாய்களிலேற்பட்ட வளர்ச்சி, பெரும்பாலும் மரபுவழியற்ற ஏற்றுமதிகளிலிருந்து முக்கியமாக ஆடைகள், சிறுவேளாண்மை உற்பத்திகள், பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான உயர்ந்த வருவாய்களின் விளைவாகவே காணப்பட்டது. மறுபுறத்தில் மரபுவழி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இவ்வாண்டில்சிறிதளவு முன்னேற்றத்தைக் காட்டின.

இறக்குமதிக்கொடுப்பனவுகள் 1980 இல் ரூ. 339,150 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 15760 இலட்சம்) 1981 இல் ரூ. 366,320 இலட்சங்களுக்கு (சிஎஉ 16160 இலட்சம்) 3 சதவீதம் கொண்ட மிதமான அதிகரிப்பைக் கொண்டிருந்தன. இது முன்னைய மூன்று ஆண்டுகளிலும் சிஎஉ நியதிகளில் பதிவுசெய்யப்பட்ட ஆண்டுச் சராசரியான 36 சதவீதங்கொண்ட விரைவான அதிகரிப்புக்களுக்கு மாறானதாகும். 1981 இல் இறக்குமதி வளர்ச்சியில் ஏற்பட்ட மந்த அதிகரிப்பிற்கு மதிநுட்பம் மிக்க கேள்வி முகாமைக் கொள்கைகளும் செலாவணிவீதங்களின் பொருத்தமான அசைவுகளும் ஓரளவு காரணமாகும். வரிஊக்குவிப்புக்கள், மீளப்பெறுகைகள் குறிப்பாக மொத்தக் கழிவுவசதி மீளப் பெறப்பட்டமையும் இறக்குமதிகளிலேற்பட்ட அதிகரிப்பைக் கட்டுப்படுத்த உதவின.

சென்மதி நிலுவையின் பணிகள் கணக்குகள் 1980 இன் மிகையான ரூ. 8,590 இலட்சங்களுடன் (சிஎஉ 400இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 1,360 இலட்சம்கொண்ட (சிஎஉ 60 இலட்சம்) சிறிதளவு மிகையைக் காட்டியது. 1978 ஆம் ஆண்டைத் தவிர 1973 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டிற்கிடைப்பட்ட காலத்தில் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் காட்டிய பணிகள் கணக்கு நடைமுறைக் கணக்கின் நிலைமை திருந்துவதற்கு உதவியது. 1981 இன் போக்கானது முற்றிலும் முரணாக அமைந்து காணப்பட்டமைக்கு வட்டிக் கொடுப்பனவுகள், சுற்றுலா வருவாய்கள், துறைமுகப்பணிகள், வெளிநாட்டுச் சொத்துக்களின் முதலீடுகளிலிருந்தான வட்டி வருவாய்கள் ஆகிய பணிகள் கணக்கில் முக்கிய வருவாய் மூலங்களாக இருந்தமையே முதன்மைக் காரணமாகும்.

வெளிநாட்டுக் கடன்கள் பன்னாட்டு நாணய நிதியிலிருந்தான எடுப்பனவுகள் வர்த்தக வைப்புக்கள் ஆகியவற்றின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1980 இன் ரூ. 9,680 இலட்சத்திலிருந்து (சிஎஉ 450 இலட்சம்) 1981 இல் ரூ. 21,160 இலட்சமாக (சிஎஉ 930 இலட்சம்) அதிகரித்தன. ஏனைய பல எண்ணெய்வளமற்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைப் போன்று இறக்குமதிகளை மேற்கொள்வதற்கு வழியமைத்திருக்கக்கூடிய, பொருட்கள், பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாயின் பெரும்பகுதியை உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகள் கவர்ந்திருந்தன. 1980 ஆம் ஆண்டின் 4 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து பொருட்கள், பணிகள் ஏற்றுமதி வருவாய்களின் ஏறக்குறைய 8 சதவீதம் 1981 இல் வட்டிக் கொடுப்பனவுகளால் ஈர்த்துக்கொள்ளப்பட்டது. 1981 இல் வெளிநாட்டுச் சொத்துக்களை முதலீடு செய்ததிலிருந்து பெற்ற வட்டிவருவாய்கள் ரூ. 5,550 இலட்சமாக (சிஎஉ 250 இலட்சம்) இருந்தது. தேறிய வட்டிக் கொடுப்பனவுகள் 1980 இன் ரூ. 1,940 இலட்சத்திலிருந்து (சிஎஉ 90 இலட்சம்) 1981 இல் ரூ. 15,610 இலட்சமாக (சிஎஉ 680 இலட்சம்) அதிகரித்தது.

சுற்றுலா பயணத்தின் வருகை 15 சதவீதம் அதிகரித்தமையினால் சுற்றுலாப் பயணத்தரின் தலைக்குரிய செலவு 14 சதவீதம் அதிகரித்தமையினாலும் 1981 இல் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 32 சதவீதத்தால் (சிஎஉ நியதியில்) ரூ. 22,700 இலட்சத்திற்கு (சிஎஉ 1000 இலட்சம்) அதிகரித்தது. வெளிநாட்டிற்கு

பயணம் செய்யும் இலங்கையர்களின் மீதான வெளிக்கொடுப்பனவுகளாகிய ரூ. 7,490 இலட்சத்தை (சிஎஉ 330 இலட்சம்) கணக்கிலெடுக்குமிடத்து பிரயாணத்திலிருந்து பெற்ற தேறிய வருவாய்கள் முன்னைய ஆண்டின் ரூ. 10,810 இலட்சங்களுடன் (சிஎஉ 500 இலட்சம்) ஒப்பிடுமிடத்து 1981 இல் ரூ. 15,210 இலட்சத்திற்கு (சிஎஉ 670 இலட்சம்) உயர்ந்தது.

முக்கியமாக வெளிநாட்டில் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இலங்கையரால் செய்யப்பட்ட பணவனுப்பல்களை உள்ளடக்கிய தனியார் மாற்றல்களிலிருந்து பெறப்பட்ட வருவாய்கள் (சிஎஉ நியதிகளில்)1980இன் ரூ. 25,180இலட்சத்திலிருந்து (சிஎஉ 1170இலட்சம்) 1981இல் ரூ. 44,020இலட்சத்திற்கு (சிஎஉ 1940 இலட்சம்) 66 சதவீதத்தால் அதிகரித்தன. இப்பணவனுப்பல்களில் பெரும்பகுதி மத்திய கிழக்கில் முக்கியமாக சவூதிஅரேபியா, குவைத், ஓமான், ஐக்கிய அராபிய எமிரேட்ஸ், பாரேன் போன்ற நாடுகளில் வேலை செய்யும் இலங்கையரால் மேற்கொள்ளப்பட்டதாகும். ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள், மேற்குசேர்மனி என்பனவற்றை உள்ளடக்கிய வேறு நாடுகளிலிருந்தும் ஒரு குறிப்பிடத்தக்க அளவு தொகையான பணவனுப்பல்கள் பெறப்பட்டன.

அட்டவணை 1.30

**பணிகளும் மாற்றல்களும் 1980 — 1981**

பத்து இலட்சம் ரூபாய்களில் (சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| விடயம் | வரவு | | | பற்று | | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1980 | 1981 | மாற்றம் 1980/81 | 1980 | 1981 | மாற்றம் 1980/81 | 1980 | 1981 |
| துறை, போக்குவரத்து காப்புறுதி ... | 725 | 986 | + 261 | 560 | 747 | + 187 | + 165 | + 239 |
| | (34) | (43) | (+9) | (26) | (33) | (+ 7) | (+ 8) | (+10) |
| பயணம் ... | 1,637 | 2,270 | + 633 | 556 | 749 | + 193 | +1,081 | + 1,521 |
| | (76) | (100) | (+ 24) | (26) | (33) | (+ 7) | (+ 50) | (+67) |
| முதலீட்டு வருவாய் ... | 774 | 555 | — 219 | 1,205 | 2,230 | +1,025 | — 431 | — 1,675 |
| | (36) | (25) | (— 11) | (56) | (98) | (+ 42) | (— 20) | (—73) |
| 1. இலாபங்களும் | — | — | — | 237 | 114 | — 123 | — 237 | — 114 |
| பங்கிலாபங்களும் ... | — | — | — | (11) | (5) | (— 6) | (— 11) | (—5) |
| 2. வட்டி ... | 774 | 555 | — 219 | 968 | 2,116 | +1,148 | — 194 | —(1,561 |
| | (36) | (25) | (— 11) | (45) | (93) | (+ 48) | (— 9) | (—68) |
| அரச செலவினம் ... | 128 | 191 | + 63 | 123 | 137 | + 14 | + 5 | + 54 |
| | (6) | (8) | (+ 2) | (6) | (6) | (—) | (—) | (+2) |
| பல்லினவகை ... | 1,341 | 1,813 | + 472 | 1,302 | 1,816 | + 514 | + 39 | — 3 |
| | (62) | (80) | (+ 18 | (60) | (80) | (+ 20) | (+ 2) | (—) |
| மொத்தப் பணிகள் ... | 4,605 | 5,815 | +1,210 | 3,746 | 5,679 | +1,933 | + 859 | + 136 |
| | (214) | (256) | (+ 42) | (174) | (250) | (+ 76) | (+ 40) | (+6) |
| தனியார் மாற்றல்கள் ... | 2,518 | 4,402 | +1,884 | 258 | 554 | + 296 | +2,260 | + 3,848 |
| | (117) | (194) | (+ 77) | (12) | (25) | (+ 13) | (+ 105) | (+169) |
| அலுவல்சார் மாற்றல்கள் ... | 2,281 | 3,118 | + 837 | — | — | — | +2,281 | + 3,118 |
| | (106) | (136) | (+ 30) | — | — | — | (+ 106) | (+136) |
| மொத்த மாற்றல்கள் ... | 4,799 | 7,520 | +2,721 | 258 | 554 | + 296 | +4,541 | + 6,966 |
| | (223) | (330) | (+ 107) | (12) | (25) | (+ 13) | (+ 211) | (+305) |
| மொத்த பணிகளும் | 9,404 | 13,335 | +3,931 | 4,004 | 6,233 | +2,229 | +5,400 | + 7,102 |
| மாற்றல்களும் ... | (437) | (586) | (+ 149 | (186) | (275) | (+ 89) | (+ 251) | (+311) |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வெளிநாட்டு அரசுகளிடமிருந்தும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட அலுவல்சார்பான மாற்றல்கள் 1980இல் ரூ. 22,810 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1060 இலட்சம்) 1981இல் ரூ. 31,180 இலட்சமாக (சிஎஉ 1360 இலட்சம்) 28 சதவீதத்தால் அதிகரித்தன. இவற்றில் ஏறக்குறைய 64 சதவீதம் அலுவல்சார் கொடைகள் செயற்றிட்ட உதவி வடிவில் கிடைத்ததாகும். 'ஐக்கிய இராச்சியம், சுவீடிஸ் பன்னாட்டு அபிவிருத்தி மேலானச் சபை, யப்பான், ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்பன முக்கிய உதவி வழங்குநராக விளங்கின. பண்ட உதவி நன்கொடைகளின் பெரும் பகுதி நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா யப்பான், நோர்வே என்பனவற்றினல் வழங்கப்பட்டமையாகும்.

1981இல் வெளிநாட்டு மூலவளக் குறையின் பெரும்பகுதி நாணயமல்லா மூலதனத்தினல் நிதியிடப்பட்டது. இம்மூலதனப் பாய்ச்சல்கள் வெளிநாட்டு கடன்களையும் நேரடி முதலீடுகளையும் உள்ளடக்கியிருந்தன. அண்மைய கடந்த காலத்தில் மூலதன உட்பாய்ச்சல்களின் அமைப்பு கணிசமான மாறுதல்களிற்கு உட்பட்டிருந்தது. 1980இல் இருந்து வர்த்தக கொடுகடன்களில் ஏற்பட்ட வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். பல அரச திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், தனியார் துறை செயற்றிட்டங்கள் என்பன இறக்குமதிகளிலிருந்து எழும் கொடுப்பனவு கடப்பாடுகளை எதிர்நோக்குவதற்கு வர்த்தகக் கொடுகடன்களை நாடின. இவற்றுள் மிக முக்கியமான நிறுவனங்கள் இலங்கை விமானச் சேவை, சீமெந்துக் கூட்டுத்தாபனம் கப்பல் கூட்டுத்தாபனம் எனபனவாகும். சில நிறுவனங்கள் முக்கியமாக முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலுள்ளவை, வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கூறுகளிலிருந்து கடன்வசதிகளைப் பெற்றன. எவ்வாறுயினும் தனியார் அரசதுறை செயற்றிட்டங்களின் மொத்த மூலதன உட்பாய்சல்கள் 1980இன் ரூ. 38,950 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1810 இலட்சம்) 1981இல் 25,430 இலட்சமாக (சிஎஉ 1160 இலட்சம்) 39 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இது முற்றுக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினல் பெறப்பட்ட குறுங்கால கொடுகடனிலேற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்டதாகும்.

அலுவல்சார்பான கடன்களின் பயன்பாடு 1980இன் ரூ. 43,260 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2010 இலட்சம்) 1981இல் ரூ. 60,870 இலட்சமாக (சிஎஉ 2680 இலட்சம்) அதிகரித்தன. இவ்வதிகரிப்பு முக்கியமாக செயற்றிட்டக்கடன்கள், யூரோ நாணயக்கடன்கள் வர்த்தகக் கொடுகடன்கள் ஆகியவை அதிகரித்தமையின் காரணமாக ஏற்பட்டதாகும். மொத்த அலுவல்சார்ந்த மூலதன உட்பாய்ச்சல்கள் செயற்றிட்ட உதவி (ரூ. 23,580 இலட்சம் அல்லது சிஎஉ 1040 இலட்சம்) பண்ட உதவி (ரூ. 15,420 இலட்சம் அல்லது சிஎஉ 680 இலட்சம்) யூரோ நாணயக் கடன் (ரூபா 14,510 இலட்சம் அல்லது சிஎஉ 640 இலட்சம்) வர்த்தக கொடுகடன்கள் (ரூ. 7,360 இலட்சம் அல்லது சிஎஉ 320 இலட்சம்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

இவ்வாண்டுக்காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியம் பல வசதிகளூடாக ரூ. 42,750 இலட்ச அளவில் (சிஎஉ 1940 இலட்சம்) இலங்கைக்கு உதவி வழங்கியது. ரூ. 33,070 இலட்ச (சிஎஉ 1500 இலட்சம்) அளவிலான விரிவுபடுத்தப்பட்ட நிதி வசதியின் கீழான கடைசி எடுப்பனவு 1981இல் நான்கு தவணைகளில் பெறப்பட்டது. இதை கணக்கிலெடுப்பின் விரிவுபடுத்தப்பட்ட நிதிவசதி ஒழுங்கு படுத்தப்பட்ட காலமான 1979-1981இற் கிடையில் இலங்கை மொத்தமாக சிஎஉ 2603 இலட்சத்தை இச்சலுகையின் கீழ் பெற்றிருந்தது. இத்தோடு 1980 இல்

காணப்பட்ட ஏற்றுமதி குறைவின் காரணமாக 1981 யூனில் ரூ. 5,560 இலட்ச (சிஎஉ 250 இலட்சம்) அளவிலான எடுப்பனவு / நட்டஈட்டு நிதி வசதியின்கீழ் பெறப்பட்டது. இவ்வாண்டில் நிதியின் ஒதுக்கு வசதியின் கீழ் ரூ. 4,120 இலட்சத்திற்கு (சிஎஉ 190 இலட்சம்) சமமான தொகையும் கிடைக்கக்கூடியதாக இருந்தது. ரூ. 2,520 இலட்சம் (சிஎஉ 120 இலட்சம்) அளவிலான சிறப்பு எடுப்பனவு உரிமையினை நான்காவது அடிப்படைக்கால ஒதுக்கில் முடிவான தவணைப்பணமும் 1981 நிதியத்திலிருந்து பெறப்பட்டது.

அட்டவணை 1.31

வெளிநாட்டு மூலவளங்களின் இடைவெளியை நிதியீட்டல் 1979—1981

| வகை | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1979 | 1980 | 1981 | 1979 | 1980 | 1981 |
| 1. வெளிநாட்டு வருவாய்கள் ... | 19,210 | 24,726 | 30,658 | 954 | 1,154 | 1,350 |
| 1.1 ஏற்றுமதிகள் ... | 15,282 | 17,603 | 20,440 | 759 | 823 | 900 |
| 1.2 பணிகள் ... | 2,993 | 4,605 | 5,815 | 149 | 214 | 256 |
| 1.3 தனியார் மாற்றல்கள் ... | 935 | 2,518 | 4,403 | 46 | 117 | 194 |
| 2. வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் ... | 26,765 | 42,424 | 56,611 | 1,330 | 2,004 | 2,498 |
| 2.1 இறக்குமதிகள் .. | 22,570 | 33,915 | 36,632 | 1,121 | 1,573 | 1,616 |
| 2.2 பணிகள் .. | 2,253 | 3,746 | 5,679 | 112 | 174 | 250 |
| 2.3 தனியார் மாற்றல்கள் ... | 182 | 258 | 554 | 9 | 12 | 24 |
| 2.4 மூலதன மீளக் கொடுப்பனவுகள் ... | 1,760 | 4,505 | 13,746 | 88 | 245 | 608 |
| 3. வெளிநாட்டு மூலவள இடைவெளி ... | —7,555 | —17,698 | —25,953 | - 376 | — 850 | — 1,148 |
| 4. மூலவள இடைவெளியினை நிதியிடல் .. | +7,555 | +17,698 | +25,953 | +376 | + 850 | + 1,148 |
| 4.1 படுகடன் நிலைமையை பாதிக்காத கொடுக்கல் வாங்கல்களூடாக நிதியிடல் | | | | | | |
| 4.1.1. அலுவல்சார் நன்கொடைகள் | 3,250 | 3,293 | 4,373 | 169 | 153 | 192 |
| 4.1.2. நேரடி முதலீடுகள் .. | 2,239 | 2,281 | 3,118 | 111 | 106 | 136 |
| 4.1.3. சி.எ.உ. ஒதுக்கீடு ... | 769 | 754 | 1,003 | 46 | 35 | 44 |
| 4.2. கடன்பாடுகளும் ஒதுக்குகளின் பயன்பாடும் ... | 242 | 258 | 252 | 12 | 12 | 12 |
| 4.2.1. நீண்டகால கடன்கள் ... | 3,503 | 8,015 | 20,811 | 172 | 327 | 930 |
| 4.2.2. குறுங்காலக் கொடுகடன்கள் | 2,903 | 4,135(அ) | 5,350 | 144 | 193 | 236 |
| 4.2.3. நிரம்பலர் கொடுகடன் ... | 41 | 4,455 | 10,518 | 2 | 207 | 465 |
| 4.2.4. வர்த்தகக் கடன்பாடுகள் | 609 | 1,173 | 1,184 | 30 | 55 | 53 |
| (தனியார் துறை) ... | — | — | 1,546 | — | — | 68 |
| 4.2.5. வங்கிக்கடன்பாடுகள் ... | — | 361 | — | — | 16 | — |
| 4.2.6. இருபுடை வர்த்தக நிலுவை | 413 | — | — | 20 | — | — |
| 4.2.7. ப.நா.நி. எடுப்பனவுகள் ... | 1,592 | 630 | 4,528 | 77 | 30 | 194 |
| 4.2.8. ஏனையவை ... | 120 | 147 | 141 | 6 | 5 | 5 |
| 4.2.9. ஒதுக்குகள் ... | —2,175 | — 2,886 | — 2,456 | —107 | — 179 | — 91 |
| 5. மதிப்பீட்டுச் சீராக்கம்(ஆ) ... | — 18 | 607 | — 39 | — | — | — |
| 6. பிழைகளும் தவிர்ப்புக்களும் .. | + 820 | + 495 | + 808 | + 35 | — 4 | 26 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) செயற்றிட்ட, பண்ட உதவி, பொறுப்பாண்மை நிதியக்கடன்கள் யூரோ டொலர் கடனின் கீழான எடுப்பனவுகள் ஆகியவற்றில் உள்ளடங்கியுள்ளது.

(ஆ) செலாவணி வீதத்தில் எற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட சீராக்கங்கள்.

## கொள்கை வழிமுறைகள்

உயர்ந்த அளவிலான இறை நாணய கட்டுப்பாடு நெகிழ்ச்சியுடைய செலாவணிவீதக் கொள்கை என்பனவற்றை முக்கியமூலகங்களாகக் கொண்ட கேள்வி முகாமை கொள்கைகளினல் வெளிக்கொடுப்பனவுகளின் நிலையிலேற்பட்ட சீர்கேட்டை கட்டுப்படுத்துவதற்கு, இவ்வாண்டுக் காலத்தில் ஒரு தீவிரமான முயற்சி எடுக்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் குறிப்பாக இறக்குமதிப் பாய்ச்சல்களின் அதிகரிப்பு வீதத்தை கட்டுப்படுத்த உதவியது.

ஏற்றுமதித்துறையில் உற்பத்திகளின் இலாப எல்லையை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களின் மீதான ஏற்றுமதி வரிகள் குறைக்கப்பட்டன. இறக்குமதிகளின் வளர்ச்சி பெருமளவில் கேள்வி முகாமை கொள்கைகளினூடாக கட்டுப்படுத்தப்பட்டது. குறிப்பாக வங்கிக் கடன்களைப் பெறுவதில் காணப்பட்ட உயர்ந்த செலவுகளினுலும் வங்கிக்கடன் வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டமையினுலும் இவ்வாண்டுக்காலத்தில் இறக்குமதிகளின் பாய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டதெனலாம். மொத்த கழிவு உதவுதொகை திட்டம் நீக்கப்பட்டமையும் இறக்குமதிப் பாய்ச்சல்களின் விரைவைக் குறைக்க உதவியது. அரசதுறை செலவினங்களின் மீதான கட்டுப்பாடுகள் வாயிலாகவும் இறக்குமதி வளர்ச்சி மேலும் குறைக்கப்பட்டது. ஆண்டின் தொடக்கத்தில் நாட்டின் வெளிநாட்டுச் சொத்து நிலைமையில் கணிசமான தாக்கத்தை உண்டுபண்ணும் வகையில் இறக்குமதிப் பொருட்களின் உள்நாட்டு நுகர்வு அதிகரித்த வீதத்தில் காணப்பட்டமையை கருத்தில் எடுப்பின் இறக்குமதிகள் மீதான இத்தகைய கட்டுப்பாடான வழிமுறைகள் பின்பற்றப்பட்டமை இன்றியமையாததாகக் காணப்பட்டது.

சென்மதி நிலுவையில் ஏற்படுத்தப்பட்ட கேள்வி நிரம்பல் நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் செலாவணி வீதங்களில் நெகிழ்ச்சி தொடர்ந்தும் விளங்கியது. ஒரு குறிப்பிட்ட நாணயத்தொகுதியின் பெறுமதியின் அடிப்படையில் கணிக்கப்பட்ட சுட்டெண்ரீதியில் இந்த ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் தீர்மானிக்கப்பட்டுவந்தது. இவ்வாண்டு காலத்கில் நெகிழ்வுடைய செலாணிவீத முகாமைக் கொள்கை வெளிக்கொடுப்பனவு நிலையில் ஏற்பட்ட தாக்கத்தை குறைக்க ஓரளவு உதவியது.


வெளிநாட்டு முதலீட்டாளர்களிற்காக தொடர்ந்தும் ஒரு கவர்ச்சியான முதலீட்டு சூழ்நிலையை நாட்டில் பேணுவதற்காக அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக நேரடிமுதலீட்டிற்கான தனியார் மூலதனங்கள், குறிப்பாக கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் கீழான செயற்றிட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டன.

## செலாவணிவீத அசைவுகள்

முக்கிய பன்னுட்டு நாணயங்களுடன் இணைந்த வகையில் இலங்கை ரூபாவின் அசைவுகள் பற்றிய ஒரு ஆய்வு, 1981 இல் ரூபாவானது ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக 14 சதவீதத்தாலும் யப்பானிய யென்னிற்கு எதிராக 7 சதவீதத்தினுலும் தேய்வடைந்தது. 1977 நவெம்பர் 16 ஆம் திகதியிலிருந்து இவ்விரு நாணயங்களுக்கெதிராக முறையே 28 சதவீத, 43 சதவீதத்தாலும் மொத்த பெறுமதி தேய்வை கொண்டிருந்தன எனக் காட்டியது. எவ்வாருயினும் 1981 இல் இலங்கை ரூபா ஸ்ரேலிங் பவுணிற்கு எதிராக 8 சதவீதத்தாலும் டியுச்

## செலாவணி வீதங்கள்

*1977 நவெம்பர் 16ம் நாள் தொடக்கம் மொத்தச் சதவீத மாற்றங்கள்*




இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: நவெம்பரிலும் திசெம்பரிலும் செலாவணி வீதங்களிலேற்பட்ட மாற்றங்கள் 1977இல் காட்டப் பட்டுள்ளன. ஏனைய ஆண்டுகளின் மாற்றங்கள் காலாண்டு அடிப்படையில் காட்டப்பட்டுள்ளன.

UNIVERSITY OF MORATUWA LIBRARY

மார்க்கிற்கெதிராக 2 சதவீதத்தாலும், பிரான்சிய பிராங்கிற்கு எதிராக 10 சத வீதத்தாலும் இந்திய ரூபாவுக்கெதிராக 4 சதவீதத்தாலும் தனது மதிப்பை உயர்த்திக்கொண்டது. இத்தோடு ஒப்பிடுகையில் 1980 இல் இலங்கை ரூபா மேற் கூறிய ஆறு முதன்மை நாணயங்களுக்கு எதிராக தேய்வுற்றுக் காணப்பட்டது. இலங்கை நாணயத்தின் செலாவணிப் பெறுமதி அசைவுகள் 1981 இல் ஐக்கிய அமெரிக்க டொலர், பவுண் ஸ்ரேர்லிங்கிற்கெதிராக 20 சதவீதத்தாலும் யப்பா னிய யென்னிற்கெதிராக 8 சதவீதத்தாலும், டியுச் மார்க்கிற் கெதிராக 8 சதவீதத்தாலும், பிரான்சிய பிராங்கிற்கெதிராக 27 சதவீதத்தாலும் இந்திய ரூபாவிற்கு எதிராக 15 சதவீதத்தாலும், பெறுமான உயர்வை கொண்டு வந்த பன்னாட்டு செலவாணி சந்தையில் ஐக்கிய அமெரிக்க டொலர் வலிமையானதாக வரத்தொடங்கியதன் விளைவாக 1981 இல் அது சிறப்பு எடுப்பு உரிமைகளிற்கு எதிராக ஏறத்தாழ 9 சதவீதத்தால் பெறுமதி உயர்வை அடைய இலங்கை ரூபா சிஎஉ விற்கெதிராக 4 சதவீதத்தால் பெறுமானத் தேய்வை அடைந்தது.

அட்டவணை 1.32

செலாவணி வீத அசைவுகள், * 1979—1981

| நாணயம் | செலாவணி வீதம் (அலகொன்றிற்கு ரூபாய்) | | | முன்னைய ஆண்டிற்கு மேலான சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1979 | 1980 | 1981 | 1979 | 1980 | 1981 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ... | 20.3611 | 22.8977 | 23.8738 | 0.68 | 12.45 | 4.26 |
| ஐ. அ. டொலர் ... | 15,4450 | 18.0000 | 20.5500 | (0.39) | 16.54 | 14.17 |
| பவுண் ஸ்டேர்லிங் ... | 34.5650 | 42.6955 | 39.0965 | 9.14 | 23.52 | (8.43) |
| டுயுச் மார்க் ... | 9.0000 | 9.2125 | 9 0665 | 5.22 | 2.36 | (1.58) |
| யப்பானிய யென் ... | 0.06454 | 0.08755 | 0.09330 | (22.85) | 35.36 | 6.57 |
| பிரான்சிய பிராங்கு ... | 3.8600 | 3.9750 | 3.5800 | 3.04 | 2.98 | (9.93) |
| இந்திய ரூபாய் .. | 1,9400 | 2.2375 | 2.2063 | 1.76 | 17.91 | (3.55) |

மூலம் : இலங்கை மத்திய வங்கி


* அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் இலங்கை ரூபாயின் உயர்வை காட்டுகின்றன.

### வெளிநாட்டுச் சொத்துக்கள்

இவ்வாண்டுக்காலப்பகுதியில் நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 24,560 இலட்சமாக (சிஎஉ 914 இலட்சம்) அதிகரிக்க, தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 4,060 இலட்சம் (சிஎஉ 260 இலட்சம்) கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. 1981 ஆம் ஆண்டு இறுதியில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1977 ஆம் ஆண்டிலிருந்து அதனது மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தது. இந்த தேறிய வெளிநாட்டுச்சொத்துக்களின் மிகுந்த வீழ்ச்சிக்கான முக்கிய காரணி வர்த்தக வங்கிகளினதும் மத்திய வங்கியினதும் அதிகரித்த பொறுப்புக்களேயா கும். எடுத்துக்காட்டாக 1981 இல் இலங்கை மத்திய வங்கியினால் உபயோகிக் கப்பட்ட நிதி வரவுகள் (பநாநி) 64 சதவீதத்தினாலும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு கடன்கள் 23 சதவீதத்தாலும் அதிகரித்தன.

# வெளிநாட்டு சொத்துக்கள்

காலாண்டுகள்




இலங்கை மத்திய வங்கி

1981 இன் இறுதியில் இலங்கை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள் அரசு, அரசாங்கமுகவர் நிலையங்கள் நிறுவனங்களினது மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் முறையே ரூ. 67,432 இலட்சம் (சிஎஉ 2835 இலட்சம்) ரூ. 23,433 இலட்சம் (சிஎஉ 980 இலட்சம்) ரூ. 1,357 இலட்சம் (சிஎஉ 57 இலட்சம்) ஆக விளங்கின. 1981 இன் இறுதியிலிருந்த மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 1982 இல் இரண்டு மாதங்களிற்கு ஒரு சிறிது மேற்பட்ட காலப் பகுதியின் மதிப்பிடப்பட்ட இறக்குமதிகளிற்கு நிதியீட்டப் போதுமானதாக இருந்தது.

வெளிநாட்டுக்கடனும் கடன் தீர்ப்பனவுகளும்

நீண்ட தவணைப் படுகடன்கள் அரசதுறை நிரம்பல் கொடுகடன் கூட்டுத் தாபனங்களையும் உள்ளடக்கிய பநாநி எடுப்பனவுகள் என்பவற்றினை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுக்கடன் 1980 இன் ரூ. 258,280 இலட்சத்திலிருந்து (சிஎஉ 120,30 இலட்சம்) 1981 ரூ. 348,240 இலட்சமாக (சிஎஉ 14760 இலட்சம்) 23 சத வீதத்தால் அதிகரித்தது. 1981 இல் நிரம்பல் கொடுகடன் ப. நா. நி. எடுப்பனவு களும் முறையே 41 சதவீதம் 83 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் வெளி நின்ற நீண்ட தவணைக் கொடுகடன்கள் 31 சதவீதத்தால் அதிகரித்தன. நீண்ட தவணைக் கொடுகடனின் வளர்ச்சியானது பெரிதும், நீண்ட தவணைக் கொடுகடன் வகையில் பெரிய பங்கை கணக்கில் காட்டிய செயற்றிட்ட உதவி பண்ட உதவி (முறையே 32 சதவீதம் 60 சதவீதம்) என்னும் இரண்டினதும் அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டதாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 1981 இல் வெளிநாட்டு வங்கிகளிற்கும் ஏனைய நிறுவனங்களிற்கும் வெளிநின்ற கடன்கள் 38 சதவீதத்தால் குறைந்தன.

நீண்டதவணை வெளிநாட்டுக் கடன்கள் அரசதுறை நிரம்பல் கொடுகடன் களிலிருந்தும் வேறு நிறுவனங்களிலிருந்தும் பெற்ற கடன்கள் ப. நா. நி. எடுப்பனவுகள் என்பவற்றின் கடன் தீர்ப்பனவும், வட்டிக்கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய கடன் தீர்ப்பனவுகள் 1980இல் ரூ. 27,630 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1370 இலட்சம்) 1981இல் ரூ. 35,290 இலட்சமாக (சிஎஉ 1500 இலட்சம்) அதிகரித்தன. சிஎஉ நியதியில் இவ்வதிகரிப்பு 1980இன் 16 சதவீத அதிகரிப் புடன் ஒப்பிடுமிடத்து 1981இல் 9 சதவீதமாக இருந்தது. மீளவழங்கல்கள் (மீளக் கொடுப்பனவுகள்) ப.நா.நிக்கு வட்டிக்கொடுப்பனவுகள் பணிக்கொடுப்பனவுகள் 28 சதவீதத்தால் அதிகரிக்கையில் ஏனைய எல்லாக் கடன்களின் மீதான கடன் தீர்ப்பனவுகள் சி எ உ நியதிகளில் 4 சதவீதத்தால் குறைந்தன. இதன் விளைவாக முழுமையான கடன் தீர்ப்பனவு விகிதம் 1980இன் 12.4 சதவீதத்திலிருந்து 1981இல் 13.4 சதவீதத்திற்கு அதிகரிக்க ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த ஏனைய கடன் தீர்ப்பனவு விகிதம் 1980இன் 7.5 சதவீதத்திலிருந்து, 6.8 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## அட்டவணை 1.33

## வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்களும் (அ) கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும் 1977-1981

பத்து இலட்சம் ரூபாய்களில் (சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக்குறிக்குள்)

| வகை | 1977 | 1978 | 1979 | 1980(ஆ) | 1981 (இ) |
|---|---|---|---|---|---|
| 1. நீண்டகாலக் கடன் இதில் .. | 10,593.5 | 14,582.3 | 15,840.6 | 22,276.8 | 29,172.2 |
| | (560.5) | (720.7) | (778.0) | (1,035.2) | (1,224.2) |
| 1.1 செயற்றிட்டக் கடன்கள் .. | 3,072.1 | 4,833.1 | 5,569.5 | 6,784.3 | 9,232.8 |
| | (162.5) | (238.9) | (273.5) | (315.3) | (387.4) |
| 1.2 செயற்றிட்டமல்லாக் கடன்கள் ... | 7,521.4 | 8,969.9 | 8.900.9 | 13,305.5 | 17,433.3 |
| | (398.0) | (443.3) | (437.2) | (618.3) | (731.6) |
| 1.3 ப.நா.நி.பொறுப்பாண்மை நிதியக் கடன்கள் ... | — | 779.3 | 1,370.2 | 2,187.0 | 2,506.1 |
| | — | (38.5) | (67.3) | (101.6) | (105.2) |
| 2. நிரம்பலர் கொடுகடன்கள் ... | 963.2 | 991.4 | 828.6 | 787.6 | 1,110.4 |
| | (51.0) | (49.0) | (40.7) | (36.6) | (46.6) |
| 3. ப. நா. நி. எடுப்பனவுகள் .. | 1,212.3 | 1,548.0 | 2,501.3 | 2,335.1 | 4,274.6) |
| | (64.1) | (76.5) | (126.3) | (112.6) | (194.3 |
| 4. வங்கிக் கடன்பாடுகள் ... ... | 552.3 | 155.1 | 69.1 | 428.6 | 266.9 |
| | (29.2) | (7.7) | (3.4) | (18.7) | (11.2) |
| 5. வெளிநின்ற மொத்த கடன்பாடு ... | 13,321.3 | 17,276.8 | 19,239.6 | 25,828.1 | 34,824.1 |
| | (704.8) | (853.9) | (948.3) | (1,203.0) | (1,476.3) |
| 6. கடன்தீர் கொடுப்பனவுகள் ... | 1,211.9 | 2,347.2 | 2,383.1 | 2,762.8 | 3,528.8 |
| | (116.3) | (119.8) | (118.0) | (137.0) | (419.5) |
| 6.1 கடன் தீர்ப்பனவுகள் .. | 966.9 | 1,862.4 | 1,627.4 | 1,781.5 | 2,121.3 |
| | (92.8) | (95.1) | (80.8) | (91.4) | (88.3) |
| (அ) ப.நா. நிதியத்திற்கு .. | 219.2 | 440.4 | 622.6 | 748.5 | 1,289.2 |
| | (21.0) | (22.5) | (30.9) | (43.4) | (51.9) |
| (ஆ) ஏனையவற்றிற்கு .. | 747.7 | 1,422.0 | 1,004.8 | 1,033.0 | 832.1 |
| | (71.8) | (72.6) | (49.9) | (48.0) | (36.4) |
| 6.2 வட்டிக் கொடுப்பனவுகள் ... | 245.0 | 484.8 | 755.7 | 981.3 | 1,407.5 |
| | (23.5) | (24.7) | (37.2) | (45.6) | (61.2) |
| (அ) ப.நா. நிதியத்திற்கு ... | 43.2 | 154.4 | 170.0 | 345.6 | 446.6 |
| | (7.0) | (7.9) | (8.4) | (12.4) | (19.7) |
| (ஆ) ஏனையவற்றிற்கு ... | 171.8 | 330.4 | 585.7 | 635.7 | 960.9 |
| | (16.5) | (16.8) | (28.8) | (33.2) | (41.5) |
| 7. பண்ட ஏற்றுமதிகள் பணிகளிலிருந்து கிடைத்த வருவாய்கள் ... | 7,563.2 | 15,148.8 | 18,274.7 | 22,208.0 | 26,255.0 |
| | (725.8) | (773.7) | (907.7) | (1,032.0) | (1,156.0) |
| 8. கடன் தீர்ப்பனவு விகிதம் (8இன் சதவீதமாக 6) .. ... | 16.0 | 15.5 | 13.0 | 12.4 | 13.4 |
| 9. கடன் தீர்ப்பனவு விகிதம் (ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக)... | 12.2 | 11.6 | 8.7 | 7.5 | 6.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) குறுங்கால வர்த்தகக் கொடுகடன்களை தவிர்க்கிறது.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது.
(இ) தற்காலிகம்.
(ஈ) ரூபாப் பெறுமதிகளைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டது. சி.எ.உ. பெறுமதிகளையும் பயன்படுத்திக் கணிக்கப்படின் கடன் தீர்ப்பனவு விகிதம் ஆண்டின் செலாவணி வீதங்களின் மாறுபாடுகள் காரணமாக இவ்வீதங்களிலிருந்தும் வேறுபடக்கூடும்.